***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC//61 /2020

: Prosecution P.W - 3

NAME : இருளப்பன்

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 13.11.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சடையப்பபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 1வது எதிரி பலவேசமுத்து என் உடன்பிறந்த அண்ணன். 2 மற்றும் 3 வது எதிரிகள் 1வது எதிரியின் மகன்கள். அசா.1 மாடத்தி என் அண்ணன் மனைவி. அசா.2 என் அண்ணன். தேதி, மாதம், வருடம் நினைவில் இல்லை. கடந்த 10 வருடங்களுக்கு முன்பு மாலை 5–5.30 மணியளவில் என் அண்ணன் திருமலைவேல் வீட்டு வாசல் முன்பு 1வது எதிரி பலவேசம் அரிவாளை எடுத்து கொண்டு வந்தார். திருமலைவேல் வீட்டிற்கு வெளியே நின்று கொண்டிருந்தார். நான் 1வது எதிரி பலவேசத்தை அரிவாளை கீழே போடு என சத்தம் போட்டேன். விலகு வெட்டி விடுவேன் என்று கூறினார். பின்னர் திருமலை வேல் வீட்டீற்குள் ஓடி விட்டார். பின்னர் திருமலைவேலுவின் மனைவி முன்வாசல் கேட்டை அடைத்து விட்டார்.

பின்னர் அசா.1 கேட்டை பிடித்து கொண்டு இருந்தார். 1வது எதிரி பலவேசமுத்து அரிவாள் பிடங்கை கொண்டு அசா.1ன் வலது கையில் அடித்து விட்டார். நான் என் அண்ணன் பலவேசத்தை பிடித்து கொண்டேன். எதிரி பேச்சிமுத்து என் அண்ணன் மனைவி அசா.1ன் தலையை பிடித்து சுற்றி இழுத்து கீழே தள்ளிவிட்டார். எதிரி சிவகுமார் என் அண்ணன் மனைவி அசா.1 ஐ கையால் அடித்தார். பின்னர் நான் கதவை திறந்து என் அண்ணனிடம் என் அண்ணியை கூட்டி கொண்டு மருத்துவமனை செல் என்று கூறினேன். சாட்சி மணிகண்டன் என்பவரை எனக்கு தெரியும். என் அண்ணன் மகன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அந்த கையெழுத்தை மறுநாள் மதியம் 2.45 முதல் 3மணிக்குள் போலிசார் வீட்டிற்கு வந்து என்ன நடந்தது என்று கேட்டார்கள். நான் போலிசாரிடம் திருமலை வேல் வீட்டின் முன்பாக சம்பவம் நடந்தது என்று போலிசாரிடம் கூறினேன். போலிசார் அங்கு வந்து படம் எடுத்து கொண்டு எத்தனை வீடு என்றும் பக்கத்தில் யார் இருக்கிறார் என்றும் விசாரித்து எழுதி கொண்டார்கள்.

அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னுடன் மணிகண்டனும் கையொப்பம் செய்தான். மேற்படி பார்வை மகஜர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

திருமலைவேல் மற்றும் பலவேசமுத்து எனது அண்ணன். எல்லா அண்ணனையும் எனக்கு பிடிக்கும். போலிசார் எழுதியதில் நான் படித்து பார்த்து கையெழுத்து போட்டேனா என்றால் எனக்கு படிக்க தெரியாது. என் அண்ணன் மகன் மணிகண்டன் படித்து காட்டி நான் கையெழுத்து போட்டேன். எங்கள் மூவரை விட பலவேசமுத்து சொத்து அதிகம் கொண்டவர் என்றால் சரிதான். பலவேசமுத்து ஊரில் பால்வியாபாரம் செய்கிறார் என்றால் சரிதான். பலவேசமுத்து பால்வியாபாரம் செய்து அதிக சொத்து வைத்துள்ளதால் எங்கள் மூவருக்கும் அவர் மீது காழ்ப்புணர்ச்சி உள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் என் அண்ணனும், என் அண்ணன் மனைவி இருசக்கர வாகனத்தில் செல்லும் போது கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்தை வைத்து கொண்டு எதிரிகளை எங்களுக்கு பிடிக்காத காரணத்தால் எதிரிகளை பழி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக போடப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நாளில், சொன்ன நேரத்தில் பார்வை மகஜரில் கையெழுத்து எதுவும்

செய்யவில்லை என்றாலும் பார்வை மகஜர் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் தயார் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC//61 /2020

: Prosecution P.W - 2

NAME : திருமலைவேல்

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 13.11.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சடையப்பபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். 1வது எதிரி பலவேசமுத்து என் உடன்பிறந்த தம்பி, 2 மற்றும் 3 வது எதிரிகள் 1வது எதிரியின் மகன்கள். அசா.1 மாடத்தி என் மனைவி. சாட்சி முத்து என்ற இருளப்பன் என் தம்பி. தேதி, மாதம், வருடம் நினைவில் இல்லை, கடந்த 10 வருடங்களுக்கு முன்பு மாலை 5 மணியளவில் என் வீட்டு முன்பாக வைத்து 1வது எதிரி பலவேசமுத்து என்னை வெட்ட வந்தார். இரண்டு மற்றும் மூன்றாவது எதிரிகள் கம்பை கொண்டு வந்தார்கள். நான் வீட்டிற்குள் சென்று விட்டேன். பின்னர் என் மனைவி கதவை இழுத்து அடைத்தார். என் மனைவியை எதிரி பலவேசம் அரிவாள் பிடங்கை வைத்து வலது கையில் அடித்தார். என் மனைவிக்கு வலதுகை வீங்கிவிட்டது. பின்னர் நான் காவல்நிலையத்திற்கு வந்து எழுதி கொடுத்து விட்டு பின்னர் என் மனைவியை தென்காசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தேன். மறுநாள் போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

காவல்நிலையத்திற்கு நானும், என் மனைவியும் 7 மணிக்கு சென்றோம். காவல்நிலையம் செல்லும் போது என் மனைவி பேசும் நிலையில் இருந்தாரா என்றால் இருந்தார். ஊரில் இருந்து ஆட்டோவில் காவல்நிலையம் சென்றோம். காவல்நிலையம் உள்ளே சென்று தான் சொன்னோம். காவல்நிலையத்தில் சொன்ன விவரங்களை எழுதி கொண்டு கையெழுத்து வாங்கி கொண்டார் என்றால் சரிதான். இரண்டு பேப்பரில் எழுதி கொடுத்தோம். புகாரை கைப்பட எழுதி கொடுத்தீர்களா என்றால் நான் புகார் கொடுக்கவில்லை, என் மனைவி கொடுத்தார். காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளர் இருந்தார். உதவி ஆய்வாளர் பெயர் தெரியாது. என்னை விட பலவேச முத்து வசதி கூடுதலானவர் என்றால் சரிதான். பலவேசமுத்து ஊரில் பால் வியாபாரம் செய்கிறார் என்றால் சரிதான். என்னை விட சொத்து பலவேசமுத்துவிற்கு கூடுதலாக உள்ளதா என்றால் உள்ளது. எனக்கு டிராக்டர் உள்ளது. டிராக்டர் வாங்கி 7 வருடங்கள் ஆகிறது. என் மகன் பெயரில் டிராக்டர் உள்ளது. மகேந்திரா கம்பெனியை சேர்ந்த வாகனம், வண்டி எண் தெரியாது. போலிசார் என்னை எப்போது விசாரித்தார் என்றால் மருத்துவமனையில் மாலை 3 மணிக்கு விசாரித்தார்கள்.

இரண்டு போலிசார் வந்தார்கள். எஸ்ஐயா, ஏட்டா என்று தெரியாது. எனக்கு சிறிய இருசக்கர வாகனம் ஓட்ட தெரியும். என் மனைவியை இருசக்கர வாகனத்தில் அழைத்து செல்வேனா என்றால் செல்ல மாட்டேன். வழக்கிற்காக வேண்டும் என்றே மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தில் நானும், என் மனைவியும் செல்லும் போது கீழே விழுந்ததில் என் மனைவிக்கு ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகளின் மீதுள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாக பழிவாங்குகுதற்காக பொய்யாக கொடுக்கபட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//61 /2020 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | மாடத்தியம்மாள் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday 13.11.2025.

**முதல் விசாரணை**

நான் தற்போது சடையப்பபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். 1வது எதிரி பலவேசமுத்து என் கொழுந்தன், 2மற்றும் 3வது எதிரிகள் 1வது எதிரியின் மகன்கள். சாட்சிகள் திருமலைவேலு, முத்து என்ற இருளப்பன் ஆகியோர்களை எனக்கு தெரியும். தேதி, மாதம், வருடம் நினைவில் இல்லை, கடந்த 10 வருடங்களுக்கு முன்பு மாலை 5 மணிக்கு என் வீட்டின் தலைவாசலில் வைத்து அப்போது எதிரி பலவேசமுத்து என்னை அரிவாளை கொண்டு வெட்ட வந்தார். எதிரி பேச்சிமுத்து என் தலையை பிடித்து கீழே இழுத்து போட்டு என்னை குத்தினார். சிவகுமார் என்னை அடிக்க வந்தார். பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. நான் மயக்கம் போட்டு கீழே விழுந்து விட்டேன். என் மகன் என் தலையில் தண்ணீர் தெளித்து என்னை தென்காசி அரசு மருத்துவமனைக்கு என் கணவர் அழைத்து சென்றார். எதிரி அரிவாளை கொண்டு வெட்ட வந்தார். அரிவாள் பிடங்கை வைத்து எதிரி பலவேசமுத்து வலது கை முன்பகுதியில் அடித்தார். அதில்

என் கை வீங்கிவிட்டது. பின்னர் தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். மறுநாள் போலிசார் அங்கு வந்து என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தனர்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

என் கணவருக்கும், பலவேசமுத்துக்கும் சொத்து தகராறு உள்ளதா என்றால் உள்ளது. இப்போது தான் உள்ளது. என் மாமனார் இறந்து இரண்டு மாதம் ஆகிறது. என் மாமனார் இறக்கும் வரை என்னுடன் தான் இருந்தார். என் மாமனாருக்கு 6 குழந்தைகள். என் மாமனாருக்கு என் கணவரை பிடிக்குமா என்றால் பிடிக்கும். பலவேசமுத்து சாப்பாடு கொடுக்காததால் என் மாமனாருக்கு அவரை பிடிக்காதா என்றால் பிடிக்காது. என் கணவரை பலவேசமுத்து வெட்ட வந்த போது நான் குறுக்கே வந்து தடுத்தால் என் கையில் காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவம் எங்கள் வீட்டிற்குள் வைத்து தான் நடைபெற்றது என்றால் சரிதான். மயக்கம் எனக்கு எப்போது தெளிந்தது என்றால் மருத்துவமனைக்கு வந்த பின்பு தான் தெளிந்தது. மயக்கம் தெளியும் போது இரவு 11 மணிஇருக்குமா என்றால் இருக்கும்.

நான் எவ்வாறு மருத்துவமனைக்கு வந்தேன் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நடந்த சம்பவம் எனக்கும், என் கணவருக்கும் மட்டும் தான் தெரியும் என்றால் சரிதான். போலிசார் என்னை மருத்துவமனைக்கு பார்க்க வந்த போது பகல் 12 மணி இருக்கும். போலிஸ் வரும் போது என்னுடன் யார் இருந்தார் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன். போலிஸ் என்னை விசாரிக்கும் போது சம்பவம் வீட்டிற்குள் வைத்து நடக்கும் போது பலவேசமுத்து தாக்க வரும் போது குறுக்கு வந்து தடுத்ததால் கையில் காயம் ஏற்பட்டது என்ற விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் எழுதாத பேப்பரில் ரேகை வாங்கி கொண்டு வாக்குமூலத்தை எழுதி கொள்வதாக சொன்னார்கள் என்றால் சொன்னார்கள். நான் எத்தனை ரேகை போட்டு கொடுத்தேன் என்றால் இரண்டு ரேகை போட்டு கொடுத்தேன். போலிஸ் எழுதி கொள்கிறேன் என சொன்னதால் என்னென்ன எழுதி உள்ளது என தெரியாது என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 3 முத்து இருளப்பன் எனது கணவரின் தம்பி. பட்டியல் சாட்சி 4 மகேஷ் எனது மற்றொரு கொழுந்தனின் மகன். பலவேசமுத்துவை தவிர மற்ற 3 பேர்களும் நன்றாக பழகி கொள்வார்கள் என்றால் சரிதான். பலவேசமுத்துவை மூவருக்கும் பிடிக்காது என்றால் பிடிக்காது. முத்து மாரியப்பன், பலவேசமுத்து இவர்களில் யாருக்கு சொத்து கூடுதலாக உள்ளது என்றால்

பலவேசமுத்துக்கு தான் கூடுதலாக உள்ளது. பலவேசமுத்து பால்வியாபாரம் செய்து வருகிறார் என்றால் சரிதான். ஊரில் பலவீடுகளிலிருந்து பால் கொள்முதல் செய்து பால்வியாபாரம் பலவேசமுத்துவும்,அவரது மகன்களான இரண்டுமற்றும் மூன்றாவது எதிரிகளும் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். என் பெயரில் டிராக்டர் கிடையாது என்றால் சரிதான்.

என் கணவர் இருசக்கர வாகனம்ஓட்டுவார். நான் சொன்ன தேதி, நாள் வகையில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் மாயாண்டி என்பவர் உண்டு என்றால் சரிதான். அவர் என் கொழுந்தன். அவருக்கு காவல்நிலையம் செல்வது பழக்கம் என்றால் சரிதான். என் கணவருடன் இருசக்கர வாகனத்தில் சென்று நான் கீழே விழுந்ததில் ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் எங்களை விட வசதி கூடுதலாக உள்ள நிலை ஏற்படுவதால் அவர்களை மட்டம் தட்ட வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் மீது பொறாமை கொண்டு மாயாண்டி என்பவரின் மூலம் அவருக்கு காவல்துறையில் உள்ள செல்வாக்கை பயன்படுத்தி பொய்யாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நடந்த சம்பவத்திற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi